கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2008/2009 (டிசம்பர் 2009) (விசேட பரீட்சை)

# ECO/S 2101 Advanced Micro Economic Theory

LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) நுகர்வோன் சம்நிலை என்ற எண்ணக்கருவினை தெளிவுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(ஆ) x, y ஆகிய இரு பண்டங்களை நுகர முற்படும் ஒரு நபரின் நாளொன்றுக்கான வருமானம் 204/= எனக் கருதுக. இவ்விரு பண்டங்களினதும் எல்லைப்பயன் தொழிற்பாடுக்ள் பின்வரும் சமன்பாட்டின்மூலம் தரப்படுகின்றது.

$$MUx = 184 - 8x$$
$$Muy = 90 - 6y$$

x பண்டத்தின் விலை Px = 8/=
y பண்டத்தின் விலை Py = 6/= எனவும் கொள்க.

(i) மேற்படி நுகர்வோனின் சமநிலையிலான கொள்வனவுகளைக் காண்க.

(06 புள்ளிகள்)

(ii) மற்றவை மாறாத நிலையில் y பொருளின் விலை 2/= வினால் அதிகரிப்பதாக எடுத்தால் மேற்படி நுகர்வோன் சமநிலையில் எவ்வாறான மாற்றம் ஏற்படும்?

(06 புள்ளிகள்)

(iii) மேற்படி தகவல்களின் அடிப்படையில் y பொருளுக்கான கேள்விக் கோடொன்றை பெறுக.

(05 புள்ளிகள்)

02.(அ) சமபயன் வளைகோடுகள் என்பதன் (Indifference curve) மூலம் விளக்கப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) சமபயன் வளைகோடுகள் ஏன் ஒன்றினை ஒன்று ஊடறுக்கமாட்டாது? என்பதை வரைபடத்தின் உதவியுடன் தெளிவுபடுத்துக?

(10 புள்ளிகள்)

(இ) சமபயன் கோட்டு ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்விக் கோட்டினைப்பெறும் முறையை எடுத்துக் காட்டுக.

(10 புள்ளிகள்)

03.(அ) விலை நுகர்ச்சி வளைகோடு (PCC) வருமான நுகர்ச்சி வளைகோடு (ICC) என்பவற்றை விளக்கி அவற்றின் பிரயோகங்களைத் தருக?

(15 புள்ளிகள்)

(ஆ) வெளிப்படுத்தப்பட்ட விருப்பத் தெரிவுக் கோட்பாடானது நுகர்வோன் நடத்தையினை எவ்வாறு விபரிக்கிறது என்பதை விளக்குக?

(10 புள்ளிகள்)

04.(அ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) குறுங்காலத்தில் சராசரிச் செலவுக்கோடு, எல்லைச் செலவுக்கோடு என்பவற்றுக்கிடையேயான தொடர்பை வரைபடம்மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) நவீன செலவுக்கோடுகள் மரபுரீதியான செலவுக் கோடுகளிலிருந்து எவ்வகையில் முன்னேற்றகரமான்து என்பதை தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

05.(அ) தனியுரிமைச் சந்தை அமைப்பின் பிரதான அம்சங்களை விளக்குக?

(08 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமையாளன் தனது வெளியீட்டுத் தீர்மானத்தை மேற்கொள்ள கேள்விக் கோட்டின் நெகிழ்ச்சியுடைய பகுதியையே தேர்ந்தெடுக்கிறான்." விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) "விலை பேதப்படுத்தல்" என்ற விடயம் தனியுரிமையில் எவ்வாறு செல்வாக்குடையது என்பதை விளக்குக?

(07 புள்ளிகள்)

06.(அ) நிறைபோட்டிச் சந்தை அமைப்பிற்கும், தனியுரிமைப் போட்டிச் சந்தை அமைப்பிற்கும் இடையிலான ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் தெளிவுபடுத்துக?

(15 புள்ளிகள்)

(ஆ) சிலருரிமைச் சந்தையில் ஒன்றில் தொகை அடிப்படையிலான போட்டி அல்லது விலை அடிப்படையிலான போட்டியே காணப்படலாம். இதை நீர் ஏற்றுக்கொள்வீரா? உதாரணம் தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

*********